தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 2, வியாழக்கிழமை

பங்குனி 19, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''சுழன்றும்ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை''.

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

காட்பாடி தொகுதியில் லத்தேரி கி. வா. குப்பம் ஊராட்சிகளை பேரூராட்சியாக்குதல்.

245—(*வினா எண். 1765) திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி கி.வா. குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் லத்தேரி, கி.வா. குப்பம் ஊராட்சிகளைப் பேரூராட்சியாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கி. வா. குப்பம் காவனூர் மற்றும் பழைய கிருஷ்ணாபுரம் ஆகிய மூன்று ஊராட்சிகளை இணைத்து ஒரு பேரூராட்சியாக தரம் உயர்த்துவதற்கான செயற்குறிப்பினை பேரூராட்சிகளின் இயக்குநர் அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

லத்தேரி ஊராட்சியைப் பேரூராட்சியாக்கும் திட்டம் ஏதுமில்லை.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கி.வா. குப்பம், காவனூர் மற்றும் பழைய கிருஷ்ணாபுரம் ஆகிய பஞ்சாயத்துக்களை ஒன்றிணைத்து பேரூராட்சியாக்குவதற்கான குறிப்புகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது நீண்ட நாட்களாக, ஏறக்குறைய 2

ஆண்டுக்காலமாக, ஆய்வில் இருக்கிறது, குறிப்பில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, துரித நடவடிக்கை எடுத்து இவ வாண்டே பேரூராட்சியாக்குவதற்கான முயற்சிகளுக்கு அமைச்சர் உதவி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெற்ற காரணத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிமன்றங்களின் தீர்மானங்களைப் பெற்று அனுப்புமாறு தெ ஆற்காடு மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அது தான் காலதாமதத்திற்குக் காரணம்.

திரு. கோ. இரகுபதி: தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள் இப்பொழுது கிராம ஊராட்சி மன்றங்களாக இருக் கின்றன. பேரூராட்சியாக்கப்படுவதற்கான நிலைபற்றி கிராமத் தலைவர்களைக் கேட்டால், நிச்சயமாக அவர்கள் ஒப்புதல் தர மாட்டார்கள் என்ற நிலையிருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக் களுடைய தலைவர்களுடைய எண்ணங்கள் அப்படித்தான் பிரதி பலிக்கும் என்ற நிலையிருக்கிறது. அங்கே வளர்ச்சியின் நலனைக் கருதி, மக்கள் நலனைக் கருதி, மேலும் அரசினுடைய நிதி ஆதாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்க, பேரூ ராட்சிகளை உருவாக்குகிறோம். ஆனால், தற்சமயம் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் ஒத்து வர மாட்டார்கள். ஆகவே அந்த முடிவினை எடுப்பதற்காக அவர்களுடைய தீர்மானத்தை ஏற்காமல், அரசே முடிவு எடுக்க வழி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

லத்தேரி ஊராட்சி, அதன் பக்கத்தில் இருக்கிற கண்ணங்குடி போன்றவற்றை ஒன்றிணைத்து ஒரு பேரூராட்சியாக்கப்படுமா? கி.வா. குப்பம் ஊராட்சியை பேரூராட்சியாக்க எந்த அளவுக்குக் கோப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளனவோ, அதைப்போல் லத்தேரியையும் பேரூராட்சியாக்கினால், அது ஒரு சாதாரண நகரமாக இருப்பதால், வளர்ச்சிக்கு உதவும். ஆக, என்னுடைய தொகுதிக்கு இரண்டு பேரூராட்சிகளை உருவாக்கித் தர முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முன்னதைப் பொறுத்தவரையில் வழியிருந்தால் அரசு செய்யும். சுமார் ரூ.1 இலட்சமாவது ஆண்டு வருமானம் பேரூராட்சியாக்கு வதற்கு இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. லத்தேரியைப் பொறுத்தவரையில் அதன் வருமானம் ரூ. 43,137 தான். ஆகவே அதற்குச் சாத்தியம் இல்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்பொழுது இருக்கிற ஊராட்சிகள் எல்லாம் 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் அதனுடைய தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. அந்த அடிப்படையில் எடுக்கப்பட்டவை. இப்போது பல்வேறுபட்ட ஊராட்சிகள், பெரிய, பெரிய ஊராட்சி மன்றங்களாக இருக்கின்றன, நிர்வாகத்திற்கு சிரமமாக இருக்கிறது. அந்த அடிப்படைத் தகுதிகள் உள்ள ஊராட்சி

1987 ஏப்ரல் 2]

மன்றங்களைப் பேரூராட்சி மன்றங்களாக அல்லது நகராட்சி மன்றங்களாக உயர்த்தித் தருவதற்கு ஒரு தனிக் குழுவை மாநில அரசு நியமிக்குமா? அப்படி உத்தேசம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பல்வேறு பேரூராட்சிகள் தங்களை மீண்டும் ஊராட்சிகளாக தரம் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்துள்ளார்களா? அப்படியென்றால் அத்தகைய கோரிக்கைகள் எத்தனை அரசுக்கு வந்துள்ளன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காட்பாடி தொகுதி சம்பந்தப்பட்ட ஒரு கேள்வியாகும். பொதுவான விவரங்கள் வேண்டுமானால் தனித்தனியே கேள்விபோட்டால் தர இயலும்.

தஞ்சை மாவட்ட பாசன வாய்க்கால்களை குடிமராமத்து செய்தல்.

83—(*வினா எண். 4218) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா பாசன வாய்க்கால்களையும் அரசு செலவில் குடிமராமத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 245, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 27-3-1986ல் தஞ்சை மாவட்டத்தில் 1986-87 ஆம் ஆண்டு கோடை கால மாதங்களில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த வாய்க்கால்களில் குடிமராமத்துப் பணிகளைச் செய்வதற்கு ரூ. 15 லட்சம் அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு (198-87) நிதி ஒதுக்கீட்டில் மிகையான குடிமராமத்து மான்யமாக (Excess Kudi-maramathu Grant) ரூ. 38,000 தஞ்சை மாவட்டத்திலுள்ள வாய்க்கால்களின் பராமரிப்பு பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே பல்வேறு காலக் கட்டங்களிலே கிராமங்களில் வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிற காரணத்தாலும் கிராமங்களிலே ஒற்றுமை மக்குலைவு இருக்கிற காரணத்தினாலும், இந்த ஆண்டு வறட்சி வெகுவாக பாதிக்கிற அறிகுறியிருக்கிற காரணத்தினாலும் அரசு எல்லா வாய்க்கால்களையும் தூர் எடுக்கிற நிலையை ஏற்படுத்தி மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருமா?